காரைக்குடி நகராட்சி
30.06.2021 ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்
தலைமை: திரு.இரா.லெட்சுமணன், ஆணையர் மற்றும் தனிஅலுவலர்
மன்றப் பொருட்கள்

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 30.06.2021 | 1 | 40. அம்ரூத் நகரங்களில் ஒன்றான காரைக்குடி நகராட்சியில் தெருவிளக்கு வசதி இல்லாத இருள் சூழ்ந்த இடங்களை கண்டறிந்து அங்கு புதிய தெருவிளக்குகள் அமைத்திட ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் நிர்பயா நிதியின் கீழ் பணி மேற்கொள்ளவும் அதற்கான கருத்துருக்களை அனுப்பி வைத்திடவும் டுபிட்கோ நிறுவனம் கடிதம் எண் TUFIDCO / NIRBHAYA FUND/ 915/ AMB)/2019, நாள் 26.04.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இந்நகரில் இருள் சூழ்ந்த இடங்கள் கண்டறியப்பட்டு அங்கு 30W மற்றும் 120W LED விளக்குகள் அமைத்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்திற்கும், இப்பணியை நிர்பயா நிதி வழிகாட்டு முறைகளின்படி மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | தீர்மான எண்.40<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 2 | 41. காரைக்குடி நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 13.75 ச.கி.மீ ஆகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 106714 ஆகும். இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் நகரில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகரின் முக்கிய குடிநீர் ஆதாரம் சம்பையூற்று என்ற இயற்கை நீரூற்று ஆகும். இங்கு 13 ஆழ்குழாய் கிணறுகளும் தலைமை நீரேற்று நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஓ.சிறுவயல் பகுதியில் இரண்டு ஆழ்குழாய் கிணறுகளுடன் கூடிய நீரேற்று நிலையம் மற்றும் நகரில் 16 இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தலைமை நீரளிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையங்களிலிருந்து பெறப்படும் குடிநீர் நகரில் கீழ்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு தினசரி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. | தீர்மான எண்.41<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 1 | திருச்சி சாலை | 2.50 இலட்சம் லிட்டர் OHT |
| 2 | சாத்தப்பா பூங்கா | 15.00 இலட்சம் லிட்டர் OHT |
| 3 | சாத்தப்பா பூங்கா | 3.00 இலட்சம் லிட்டர் OHT |
| 4 | மகர்நோன்புதிடல் | 15.00 இலட்சம் லிட்டர் OHT |
| 5 | மகர்நோன்புதிடல் | 3.00 இலட்சம் லிட்டர் OHT |
| 6 | சுப்பிரமணியபுரம் | 4.00 இலட்சம் லிட்டர் OHT |

| | | |
|---|---|---|
| 7 | சூடாமணிபுரம் | 8.00 இலட்சம் லிட்டர் OHT |
| 8 | செஞ்சை | 6.00 இலட்சம் லிட்டர் OHT |
| 9 | கல்லுக்கட்டி | 1.65 இலட்சம் லிட்டர் OHT |
| 10 | கழனிவாசல் | 3.00 இலட்சம் லிட்டர் OHT |

மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றம் செய்திட 22.101 கி.மீ நீளத்திற்கு பம்பிங் மெயின் குழாய்களும், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 186.733 கி.மீ நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கு ஏற்றவாறு அடைத்து, திறப்பதற்கு 38 வால்வுகள் அமைக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரளிப்பு நிலையம் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல், இயக்குதல் மற்றும் முறையான குடிநீர் விநியோகம் செய்தல் போன்ற குடிநீர் விநியோகம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளை செய்திட தேவையான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று (ந.க.எண்.2365/2012/DO1 நாள் 13.06.2019) தனியார் நிறுவனம் மூலம் 01.08.2019 முதல் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 01.08.2019 முதல் 31.07.2020 வரை ஓராண்டு அனுமதி காலம் முடிவுற்ற நிலையில் மீண்டும் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று (ந.க.எண்.29156/2019/DO2, நாள் 09.10.2020) 01.08.2020 முதல் 31.07.2021 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் இரண்டாம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட காலம் வருகிற 31.07.2021ல் முடிவடைவதால் மீண்டும் தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்றிட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட குடிநீர் விநியோக பராமரிப்பு பணியினை தொடர்ந்து தனியார் மூலம் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள ஓராண்டிற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.117.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.

**3**

42. இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட குழுக்காப்பீடு திட்டத்திற்குரிய நகராட்சி நிர்வாக பங்குத் தொகையான மார்ச் 2019 முதல் பிப்ரவரி 2020 வரையிலான காலத்திற்கு அரசு கணக்கில் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.4,58,700/-ஐ 2019-2020 ஆண்டிற்குரிய தணிக்கைத் தடையில் தணிக்கை எண்.75ல் உரிய அரசு தலைப்பில் செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மார்ச் 2019 முதல் பிப்ரவரி 2020 வரையிலான காலத்திற்கு குழு காப்பீடு திட்டத்திற்கு நிர்வாக பங்குத் தொகையான ரூ.4,58,700/-ஐ உரிய அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1453/2016/சி4)

**தீர்மான எண்.42**
**அலுவலக குறிப்பு**
**அனுமதிக்கப்பட்டது**

| | | | |
|---|---|---|---|
| | 4 | 43. காரைக்குடி நகராட்சியில் வார்டு எண்.22 மற்றும் 23ல் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம். சாலை (1 பீட் முதல் ஆர்.எம்.ஆர் ஜவுளி கடை வரை) பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்லக்கூடிய போக்குவரத்து அதிகம் உள்ள சாலையாகும். தற்போது மேற்படி சாலையில் பாதாள சாக்கடைப் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி எஸ்.ஆர்.எம். தெரு சாலையை மேம்பாடு செய்து புதிதாக தார்த்தளம் அமைப்பதற்கு IUDM 2018-2019 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதால் பாதாள சாக்கடைப் பணி முடிவுற்ற நிலையில் தற்போது சாலை மேம்பாடு பணி துவங்கப்பட்டுள்ளது. பணி மேற்கொள்ளும் நிலையில் அளவீடு செய்யப்பட்டதில் மேற்படி சாலையின் நீளம் மதிப்பீட்டில் உள்ளதை விட 135 மீட்டர் கூடுதலாக உள்ளது அவ்வாறு கூடுதலாக உள்ள நீளத்திற்கும் சாலையை மேம்பாடு செய்து தார்ச்சாலை அமைத்தால் தான் மேற்கண்ட பணி முழுமை பெறும் நிலை உள்ளது. எனவே, வாகனப் போக்குவரத்து அதிகம் உள்ள மேற்படி எஸ்.ஆர்.எம்.தெரு சாலையின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு கூடுதலாக உள்ள நீளத்திற்கும் (கிழக்கு கடைசி பகுதி) புதிதாக தார்ச்சாலை அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.43<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | 5 | 44. இந்நகராட்சியில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் மேற்கொள்ளப்பட்ட தணிக்கை பணிக்காக 2019-2020ம் ஆண்டு தணிக்கை கட்டணம் ரூ.187250/-ஐ அரசு கணக்கில் செலுத்த தணிக்கை தடை பத்தி எண்.84ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே தணிக்கை கட்டணம் ரூ.187250/-யை அரசு கணக்கில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.9457/2002/அ3) | **தீர்மான எண்.44<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | 6 | 45. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME I) துறை அரசாணை எண்.(MS) No.36 நாள் 19.04.2021ன்படி, 01.04.2021 முதல் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர்க்கு செலுத்தும் வருடாந்திர பங்களிப்பு தொகை சிறப்பு நிலை நகராட்சிக்கு ரூ.1,50,000/-லிருந்து ரூ.2,00,000/- ஆக உயர்த்தப்பட்டு அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.8462/2012/சி1) | **தீர்மான எண்.45<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | 7 | 46. காரைக்குடி நகராட்சியின் 2020-2021ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1787/2020/சி1) | **தீர்மான எண்.46<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

**8**

47. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் காம்பேக்ட் வாகன எண்.TN25 AQ8404 எண்ணுள்ள வாகனத்திற்கு FC வேலைகள் பார்ப்பதற்காக 19.04.2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனம் | FC வேலைகள் செய்வதற்கான தொகை ரூ. |
|---|---|---|
| 1 | KARTHIK KANNAN AUTO SPARE & SERVICES, MADURAI MAIN ROAD, KARAIKUDI | 49500 |
| 2 | SRI SREENIVASA SERVICES STATION, 641, KOVILOOR ROAD, KARAIKUDI | 51500 |
| 3 | K.S. RAHUMATHULLA RAKILA ENGINEERING WORKS, OPP MPTC DEPOT, MADURAI MAIN ROAD, KARAIKUDI | 50500 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.49500/-க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள KARTHIK KANNAN AUTO SPARE & SERVICES, MADURAI MAIN ROAD, KARAIKUDI நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.990/2021/எச்1)

**தீர்மான எண்.47**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**9**

48. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண்.TN63 U9666 எண்ணுள்ள வாகனத்திற்கு FC வேலைகள் பார்ப்பதற்காக 16.03.2021ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனம் | FC வேலைகள் செய்வதற்கான தொகை ரூ. |
|---|---|---|
| 1 | KARTHIK KANNAN AUTO SPARE & SERVICES, MADURAI MAIN ROAD, KARAIKUDI | 49000 |
| 2 | SRI SREENIVASA SERVICES STATION, 641, KOVILOOR ROAD, KARAIKUDI | 53500 |
| 3 | K.S. RAHUMATHULLA RAKILA ENGINEERING WORKS, OPP MPTC DEPOT, MADURAI MAIN ROAD, KARAIKUDI | 51000 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.49000/-க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள KARTHIK KANNAN AUTO SPARE & SERVICES, MADURAI MAIN ROAD, KARAIKUDI நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.48**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.990/2021/எச்1) | |
| | **10** | 49. இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் பரவலை தடுக்கும் பொருட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட ஏதுவாக நகராட்சிக்கு சொந்தமான 10 எண்ணிக்கை இலகு ரக வாகனங்களில் (LCV) ஒலிபெருக்கி சாதனம் வாங்கி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.49<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **11** | 50. இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்பட்ட கேஸ் அடுப்பு வால்வு பழுதடைந்துவிட்டதால் மேற்படி கேஸ் அடுப்பு வால்வு பழுது நீக்கம் செய்யப்பட்ட வகையில் செலவினம் ரூ.2750/- அம்மா உணவகம் பராமரிப்பு யோகம் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி பணி செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6529/2019/அ3) | **தீர்மான எண்.50<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **12** | 51. காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான அண்ணா தினசரி நாளங்காடி கடைகளில் தினசரி வசூல் செய்யும் உரிமம் 2018-2019 முதல் 2020-2021ம் ஆண்டு வரை மூன்றாண்டுகளுக்கு திரு.ஜெ.ஈஸ்வர் என்பவரால் குத்தகைக்கு எடுத்து நடத்தப்பட்டது. 2021-2022ம் ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சட்டமன்ற பொது தேர்தல் 2021 நன்னடத்தை விதிகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 2021 ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய மூன்று மாதங்களுக்கு காலம் நீட்டிப்பு செய்து மேற்படி நபருக்கு வழங்கப்பட்டது. தற்போது கொரோனா தொற்று காரணமாக பொது ஊரடங்கு காலமாக இருப்பதால் வசூல் செய்ய இயலவில்லை என்பதால் மேற்படி குத்தகை காலத்தை ஏலம் கோராமல் நீட்டிப்பு செய்து தரக் கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் WP(MD)NO.10384 OF 2021 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன் அவர்கள் ஆஜராகி வழக்கு நடத்தியமைக்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே ரூ.7,500/-ஐ வழக்கறிஞர் கட்டணமாக திரு.பி.மகேந்திரன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2205/2021/அ1) | **தீர்மான எண்.51<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | 13 | 52. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி டெங்கு தடுப்பு மற்றும் ஏடிஸ் கொசு புழு தடுக்கவும், வீடு தோறும் டெங்கு தடுப்பு விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ள (DBC) பணியாளர்கள் (DOMESTIVE BREEDING CHECKER) நியமித்து பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக தினசரி ஊதியப்பட்டியலின்படி சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி உட்புற கொசு தடுப்பு பணியாளர்களான (DBC) பணியாளர்கள் நியமிக்க 3 மாதத்திற்கு ஒரு முறை அனுமதி பெற்று MMSW பணியாளர்கள் நிறுவனத்தின் மூலம் பணியாளர்கள் பெற்று பணிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே ஜீன் 2021 வரை மட்டுமே அனுமதி பெறப்பட்டுள்ளதால் ஜீன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரை அனுமதி பெற வேண்டும். 50 வீடுகள் ஒரு (DBC) பணியாளர்கள் ஒரு நாளைக்கு பார்வையிட்டு பணி செய்ய வேண்டும். அதன்படி 1 (ஒரு) (DBC) பணியாளர் வாரம் ஒன்றுக்கு 300 வீடுகள் பார்க்க வேண்டும். இந்நகராட்சியிலுள்ள 26745 வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் 2949 இருப்பதால் 90க்கு மேற்பட்ட (DBC) பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். மாதம் ஒன்றிற்கு 90 பணியாளர்கள், தினசரி ஊதியம் ரூ.270/- நாட்கள் 26 (ஞாயிறு நீங்கலாக) 90 x 270 x 25 = Rs.631800/- வீதம் 3 மாதங்களுக்கு ரூ.631800x3=1895400/- செலவாகும். ஆனால் தற்போது வரை 45 (DBC) பணியாளர்கள் வரை நியமிக்கப்பட்டு பணி செய்யப்பட்டு வருகிறது. டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் வருவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால் (DBC) பணியாளர்கள் கூடுதலாக நியமிக்க கூடிய சூழல் உள்ளது. எனவே, ஜீலை 2021 முதல் செப்டம்பர் 2021 வரை 3 மாதங்களுக்கு 90 (DBC) பணியாளர்கள் நியமிக்க அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1895400/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3245/2017/எச்1) | **தீர்மான எண்.52**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 14 | 53. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் உள்ள நுண் உரம் செயலாக்க மையங்களுக்கும், கலவை உரக்கிடங்கில் உள்ள RCC மையத்திற்கும் அங்கு வரும் மட்கும் குப்பை மற்றும் மட்காத குப்பைகளின் அளவினை துல்லியமாக கணக்கீடு செய்ய 200 கிலோ அளவிலான எடைபோடும் அளவு திறன்கொண்ட எடை இயந்திரம் 5 எண்ணம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கும் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பணியின் அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று மேல்நடவடிக்கை தாடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.2243/2021/எச்1) | **தீர்மான எண்.53**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 15 | 54. இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு எண்.3ல் உள்ள 15 எச்.பி நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 17.05.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. | **தீர்மான எண்.54**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | 1. M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி ரூ.32,093/-<br>2. ஸ்ரீ சுந்தரம் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி ரூ.33,016/-<br>3. ஸ்ரீ கணேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி ரூ.33,394/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் செலவுத் தெகை ரூ.32,093/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | |
| | **16** | 55. காரைக்குடி நகராட்சியில் பொது சுகாதாரப் பணிகளுக்கு போதிய நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் இல்லாததால் 133 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் 3 ஆண்டுகளுக்கு பணிக்கு அமர்த்திக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் 23.08.2017ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன்பேரில் 133 தூய்மைப் பணியாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/Sமதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்ஸி, காரைக்குடி நிறுவனத்திற்கு 29.12.2017ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு, 01.08.2018 முதல் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் அனுமதிக்கப்பட்ட 3 ஆண்டு பணிக்காலம் வருகிற 31.12.2020ல் முடிவடைய இருப்பதால் 133 தூய்மைப் பணியாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்ள வழங்கப்பட்ட உத்தரவினை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கிடக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்கண்ட நீட்டிப்பு உத்தரவு பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு சற்று காலதாமதம் ஏற்படும் என்பதால் தற்போது பணி மேற்கொள்ளும் மேற்படி M/Sமதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் நிறுவனம் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர தொகையின் அடிப்படையில் (மாதம் ஒன்றுக்கு ரூ.20,70,087/- வீதம்) தொடர்ந்து மூன்று மாத காலத்திற்கு (01.04.2021 முதல் 30.06.2021 வரை) தொடர்ந்து 133 தூய்மைப் பணியாளர்களை வழங்கிடும் பணியை நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிடவும் மற்றும் மூன்று மாத காலத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.62,10,261/-க்கும் நகர்மன்ற தீர்மான எண்.351 நாள் 26.02.2021ல் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் புதிய கருத்துருக்களுக்கு இதுவரை அனுமதி கிடைக்கப் பெறாததாலும், புதிய ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் பெற்றிட வழி இல்லாத காரணத்தால் தொடர்ந்து தற்போது பணி மேற்கொள்ளும் M/Sமதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்ஸி, காரைக்குடி நிறுவனம் மூலம் தற்போது வழங்கப்பட்டுவரும் மாதாந்திர அடிப்படையில் (மாதம் ஒன்றுக்கு ரூ.20,70,087/- வீதம்) தொடர்ந்து மூன்று மாத காலத்திற்கு (01.07.2021 முதல் 30.09.2021 வரை) தொடர்ந்து 133 தூய்மை பணியாளர்களை வழங்கிடும் பணியை நீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கிடவும் மற்றும் மூன்று மாத காலத்திற்கான உத்தேச செலவு தொகை ரூ.62,10,261/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.55<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6800/2016/எச்1) | |
| | 17 | 56. இந்நகராட்சி வார்டு எண்.08, நடேசன் தெருவில் உள்ள சிறு மின்விசை நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 15.04.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/S.பாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி ரூ.9,568/-<br>2. ஸ்ரீ சுந்தரம் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி ரூ.10,341/-<br>3. ஸ்ரீ கணேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி ரூ.10,661/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S.பாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் செலவுத் தெகை ரூ.9,568/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.56**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | 18 | 57. காரைக்குடி நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணி தரமற்ற நிலையில் நடைபெறுகிறது என தெரிவித்து திரு.ஜிடி.மணிகண்டன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்.WP(MD).NO.18932/2019 தொடர்பாக நகராட்சி சார்பாக திரு.பி.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜரானதற்கும் மற்றும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.7,500/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.57**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | 19 | 58. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டெங்கு நோயை ஏற்படுத்தும் ஏடீஸ் கொசுக்கள் மற்றும் இதர நோய்களான மலேரியா, பைலேரியா, மூளைக்காய்ச்சல் ஏற்படுத்த கூடிய அனா:பிலஸ், கியூலக்ஸ் போன்ற கொசுக்களை அழித்திடவும், தற்சமயம் பருவமழை காலம் தொடங்கிவிட்டதால் கொசு உற்பத்தி அதிகமாகி கொசுக்களின் அடர்த்தி (Density) கூடுதலாக ஏற்படக்கூடிய சூழல் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி கொசுக்களால் எவ்வித நோய் தொற்று ஏற்படா வண்ணம் பாதுகாத்திடும் வகையில் பணி மேற்கொள்ள PULSE FOGGING MACHINE 2 எண்ணம் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,20,000/-க்கும் மேலும், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்ப்பஸ் கூட்டுறவு நிறுவனத்திடம் நேரடியாக விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.58**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 20 | 59. மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களால் வழங்கப்பட்ட இயற்கை பேரிடர் கோவிட் 19 நிதியின் கீழ் ரூ.13.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகரில் சூரக்குடி சாலையில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் புதியதாக இரண்டு எண்ணிக்கை உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ந.க.எண்.என்சி1/5681/2020 எண்ணிட்ட கடிதத்தில் வாங்கி காசோலை எண்.457240 தேதி 05.06.2021 தொகை வரப்பெற்றதன் பேரில் 11.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><br>வ.எண் \| ஒப்பந்ததாரர் பெயர் \| ஒப்பந்த சதவீதம்<br>1 \| M/S RAHMAN ELECTRICALS, NO 47/01, OPP PWD OFFICE, PUDUKOTTAI. \| மதிப்பீட்டை விட 0.20% குறைவு<br>2 \| M/S K R NOOR MOHAMMED ELECTRICALS, ALANGUDI, PUDUKOTTAI. \| மதிப்பீட்டை விட 1.50% அதிகம்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S RAHMAN ELECTRICALS, NO 47/01, OPP PWD OFFICE, PUDUKOTTAI என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.20% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.59 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 21 | 60. இந்நகராட்சியில் பணிபுரியும் 230 அலுவலக பணியாளர்களுக்கும் நிழற்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கும் பணிக்கு 16.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/S அருள் கம்ப்யூட்டர்ஸ், காரைக்குடி – 230 x 130 - ரூ.29,900/-<br>2. சிவம் காப்பியல், காரைக்குடி – 230 x 130 - ரூ.33,350/-<br>3. காரை கம்ப்யூட்டர்ஸ், காரைக்குடி – 230 x 130 - ரூ.34,500/-<br>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S அருள் கம்ப்யூட்டர்ஸ், காரைக்குடி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் மற்றும் செலவுத் தொகை ரூ.29,900/-க்கும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.60 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>22</td><td>61. இந்நகராட்சி வார்டு எண்.10 சின்னையா அம்பலம் பள்ளி அருகில் உள்ள நீர்மூழ்கி மின் மோட்டார் பம்ப் பழுது பணிக்கு 28.04.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி ரூ.7,834/-<br>2. ஸ்ரீ சுந்தரம் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி ரூ.8,313/-<br>3. ஸ்ரீ கணேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ் சர்வீஸ், காரைக்குடி ரூ.8,330/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/Sபாரதி எலெக்ட்ரிக்கல்ஸ் அன்ட் ரீவைண்டிங் ஒர்க்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளவும் செலவுத் தெகை ரூ.7,834/-க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.61<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>23</td><td>62. இந்நகராட்சி வருவாய் நிதி 2021-2022ன் கீழ் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் உபயோகத்தில் உள்ள லேசர் பிரிண்ட்டர் டாட் மேட்ரிக் பிரிண்ட்டர் மற்றும் ஜெராக்ஸ் மிஷின்களில் பயன்படுத்துவதற்கு புதிய கேட்ரேஜ் சப்ளை செய்யும் பணிக்கு நகர்மன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 16.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/S.ARUL COMPUTERS, KARAIKUDI</td><td>மதிப்பீட்டை விட 0.30% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S.KAARAI COMPUTERS, KARAIKUDI</td><td>மதிப்பீட்டை விட 4.73% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.ARUL COMPUTERS, KARAIKUDI என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.30% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.62<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>24</td><td>63. இந்நகராட்சி வருவாய் நிதி 2021-2022ன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பகுதிகளில் கொரோனா நோய் பரவலை தடுக்கும் பொருட்டு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட நகராட்சிக்கு சொந்தமான 10 எண்ணிக்கை இலகு ரக (LCV) வாகனங்களில் ஒலிபெருக்கி சாதனம் வாங்கி பொருத்தும் பணிக்கு நகர்மன்றம் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பேரில் 18.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.</td><td>தீர்மான எண்.63<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/S MALLIKA & CO, KARAIKUDI</td><td>மதிப்பீட்டை விட 0.34% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>THIRU T.MURUGAN, KARAIKUDI</td><td>மதிப்பீட்டை விட 5.08% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S MALLIKA & CO, KARAIKUDI என்ற நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.34% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>25</td><td>64. காரைக்குடி இரயில்வே பீடர் சாலையில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம் செயல்பட்டு வந்த நகராட்சிக்கு சொந்தமான ஓட்டுக் கூரை கொண்ட கட்டிடத்தின் மேற்கூரை ஓடுகள் உடைந்தும் மற்றும் கட்டிடத்தின் பக்க சுவர்களில் விரிசல் ஏற்பட்டு உறுதியற்ற நிலையில் மீண்டும் புதுப்பித்திட இயலாத நிலையில் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் பொது ஏலம் விட்டு கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.64<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>26</td><td>65. இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN63 AV5823க்கு பழுதுகள் சரிசெய்யும் பணிக்கு 30.06.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>
1. SRI AMMAN AUTOMOBILES, KARAIKUDI - RS16,520/-<br>
2. SRI SOLAI RAJA AUTO CARRIAGE, KARAIKUDI - RS17,500/-<br>
3. SRI BALAJI AUTO MOBILES, KARAIKUDI - RS18,225/-<br>
பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளியில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய SRI AMMAN AUTOMOBILES, KARAIKUDI அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கைக்கு தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.65<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>27</td><td>66. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு நுண் உரம் செயலாக்க மையங்களுக்கு 200 கிலோ அளவிலான எடை இயந்திரம் விநியோகம் செய்திடும் பணிக்கு 04.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில்</td><td>தீர்மான எண்.66<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>1. M/S ESWARI ENTERPRISES, DEVAKOTTAI – 1 எண்ணம் - RS16,500/-<br>2. KARTHIKEYAN IRON WORKS, MADURAI - 1 எண்ணம் - RS17,100/-<br>3. NAGAPPA ENGINEERING WORKS - 1 எண்ணம் - RS17,500/-<br>பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.16,500/- குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/S ESWARI ENTERPRISES, DEVAKOTTAI நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும் விநியோக உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கைக்கு தொடர்ந்ததையும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2243/2021/எச்1) | |
| | **28** | 67. காரைக்குடி நகராட்சி, சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு சிறப்புநிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 106714 ஆகும். இந்நகரில் பரப்பளவு 13.75 ச.கி.மீ ஆகும். இந்நகராட்சி 36 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்நகராட்சியில் 146.913 கி.மீ நீளமுள்ள நகராட்சி சாலைகளும், 12.819 நீளமுள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளும் சேர்த்து மொத்தம் 159.732 கி.மீ நீளமுள்ள சாலைகள் உள்ளன. இந்நகரில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கப்படும் என 2012ம் ஆண்டு சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதனை தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயார் செய்யப்பட்ட ரூ.112.33 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ள நிதிகளின் கீழ் பணி மேற்கொள்ள 24.12.2014ல் நிர்வாக அனுமதி வழங்கி அரசாணை வழங்கப்பட்டது.<br>IUDM திட்டம் மானியம் - ரூ.42.87 கோடி<br>Kfw திட்டம் கடன் - ரூ.28.13 கோடி<br>Kfw திட்டம் மானியம் - ரூ.30.28 கோடி<br>நகராட்சி பங்கு தொகை - ரூ.11.25 கோடி<br>-------------------------<br>மொத்தம் - ரூ.112.53 கோடி<br>-------------------------<br>மேற்கண்ட பணிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு, தலைமைப் பொறியாளர், மதுரை அவர்களால் 25.02.2015ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் கீழ்க்கண்டுள்ள பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்டன.<br>1. கழிவுநீர் குழாய் பதித்தல் - 144.653 கி.மீ<br>2. ஆழ்நுழைவு தொட்டி அமைத்தல் - 5559 எண்ணம்<br>3. வீட்டு இணைப்புகள் வழங்குதல் - 31725 எண்ணம்<br>4. 16 எம்.எல்.டி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - 1 எண்ணம் | **தீர்மான எண்.67**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, M/Sசுப்பையா கன்ஸ்ட்ரக்சன்ஸ், சென்னை என்ற நிறுவனத்திற்கு 26.11.2015ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டது.<br>22.02.2016ல் மேற்படி நிறுவனம் பணியை துவங்கிய நிலையில், இத்திட்டத்தில் அமைக்கப்படவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றிடக் கோரி தனிநபர் ஒருவரால் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டு தடையாணை பெறப்பட்டதால் பணி நிறுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து வழக்கு நடைபெற்று இறுதியாக 05.05.2017ல் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றவுடன் மீண்டும் 12.05.2017ல் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.<br>இத்திட்டப் பணியில் தற்போது வரை கழிவுநீர் குழாய் பதித்தல் பணியில் 95% பணிகளும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பணியில் 75 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை வருகிற 30.09.2021க்குள் முழுமையாக முடித்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>இந்நகரில் உள்ள 160.00 கி.மீ நீளமுள்ள சாலைகளில் இத்திட்டப் பணியின் கீழ் 145.00 கி.மீ நீளமுள்ள மட்டும் கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. குடியிருப்புகள் அதிகம் உள்ள குறுகிய சந்துகள், இணைப்பு சாலைகள் உள்ளிட்ட சுமார் 15.00 கி.மீ நீளமுள்ள தெருக்களிலும் மற்றும் கடந்த 10 ஆண்டுகளில் தோற்றுவிக்கப்பட்டுள்ள 6.000 கி.மீ நீளமுள்ள சாலைகளிலும் கழிவுநீர் குழாய்கள் அமைத்தால் தான் நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கிட இயலும்.<br>எனவே, தற்போது நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப் பணி முடிவுறும் நிலையில் உள்ளதால் இந்நகரில் விடுபட்டுள்ள சுமார் 21.00 கி.மீ நீளமுள்ள சாலைகளில் பாதாள சாக்கடை அமைத்திடவும், இப்பணிக்கான விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்திட அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| | **29** | 68. காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளின் ஒரு பகுதியான நுண்உரம் செயலாக்க மையங்கள் நான்கிலும் மட்கும் தன்மை கொண்ட கழிவுகள் உரமாக்கப்படுகின்றன. இவ்உரத்தினை சலித்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஒவ்வொரு நுண்உரம் மையத்திலும் தயாரிக்கப்பட்ட உரத்தினை சலிப்பதற்கு சல்லடை மோட்டார் பொருத்திடவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று நான்கு எண்ணம் சல்லடை மோட்டார் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.68**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி